**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 267**

**மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010

## 1. மாவட்டச் செயலகத்தின் முக்கிய பணிகள்

- i. வறுமைக் குறைப்பு முயற்சிகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல்
- ii. அனர்த்த நிவாரண மற்றும் புனரமைப்பு செயற்திட்டங்களை நிர்வகித்தல்
- iii. அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தல்
- iv. தேர்தல்களை ஒருங்கிணைத்தல்
- v. மாவட்ட செயற்திட்ட நிர்வாகம் மற்றும் நெறிப்படுத்தல்
- vi. வருமானத்தினைச் சேகரித்தல்

## 2. மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள்

- (அ) கரைத்துறைப்பற்று
- (ஆ) ஒட்டிசுட்டான்
- (இ) மாந்தை கிழக்கு
- (ஈ) துணுக்காய்
- (உ) புதுக்குடியிருப்பு

2011 ஜனவரி 01 தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இவ் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளன.

## 3. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மாவட்டச் செயலகம் கணக்காண்டின் தொடக்கத்தில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்றைத் தயாரித்திருக்கவில்லை.

## 4. கணக்குகள்

### 4.1 மொத்த ஏற்பாடும், செலவினமும்

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் 05 உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிற்கான மொத்த நிதி ஏற்பாடு ரூபா 99,395,000 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 95,848,813 ஆன தொகை பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களின் தேறிய சேமிப்பு ரூபா 3,546,187 ஆனது தேறிய ஏற்பாட்டில் 3.57 சத வீதமாக காணப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | வருடாந்த மொத்த மதிப்பீட்டு ஏற்பாடு | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | மொத்த தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவரும் | 68,625,000 | 68,625,000 | 66,142,553 | 2,482,447 | 3.62 |
| மூலதனம் | 30,770,000 | 30,770,000 | 29,706,260 | 1,063,740 | 6.46 |
| மொத்தம் | **99,395,000** | **99,395,000** | **95,848,813** | **3,546,187** | **3.57** |

### 4.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து கிடைத்திருந்த ஏற்பாடுகளின் பயன்படுத்துகை

பல்வேறு நோக்கங்களிற்காகவும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்கங்களிடமிருந்து கீழே காட்டப்பட்டவாறு ரூபா 362,796,152 ஆன நிதி ஏற்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அவ் ஏற்பாடுகளின் பயன்படுத்தல் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு இலக்கம் | ஏற்பாடுகள் கிடைத்திருந்த அமைச்சு/திணைக்களம் | ஏற்பாடுகள் | உண்மையான செலவினம் | சேமிப்புகள் (2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு) |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| 105 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 65,417 | 61,547 | 3,870 |
| 106 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 1,365 | 1,178 | 187 |
| 117 | நெடுஞ்சாலைகள் அமைச்சு | 9,504 | 9,043 | 461 |
| 118 | கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சு | 72 | 46 | 26 |
| 120 | சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சு | 75 | 52 | 23 |
| 121 | பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 5,773 | 4,697 | 1,076 |
| 124 | சமூக சேவைகள் அமைச்சு | 978 | 936 | 42 |
| 140 | கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 500 | 410 | 90 |
| 145 | மீள்குடியேற்ற அமைச்சு | 124,063 | 122,439 | 1,624 |
| 153 | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 276 | 264 | 12 |
| 204 | இந்து சமய கலாச்சார அலுவல்கள் அமைச்சு | 7,275 | 7,231 | 44 |
| 217 | நன்னடத்தைகள், சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | 283 | 247 | 36 |
| 252 | குடிசன மதிப்பு புள்ளவிபரவியல் திணைக்களம் | 533 | 424 | 109 |
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் | 144,892 | 78,808 | 66,084 |
| 254 | பதிவாளர் நாயகத் திணைக்களம் | 1,790 | 1,337 | 453 |
| | மொத்தம் | **362,796** | **288,659** | **74,137** |

## 4.3 கணக்காய்வு மற்றும் கணக்காய்வின் நோக்கெல்லை

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப் பதிவேடுகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், ஏடுகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் அடங்கலான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு/கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(I) ஆம் உறுப்பிரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 ஓகஸ்ட் 18 ஆந் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டன.

## 4.4 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்பிரைகள் மற்றும் பொது நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களிற்கு அமைவாக பேணுதல், தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பில் உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும், அமுலாக்கலும், அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரிப்பதும் இப் பொறுப்பினுள் உள்ளடங்கும்.

## 4.5 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாவட்டச் செயலகத்தின் நிதிக் கணக்குகள் மற்றும் புத்தகங்களிற்கு அமைய அமைய கீழ் வரும் (அ) தொடக்கம் (ஈ) ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் 4.6 தொடக்கம் 4.12 வரையிலான பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### (அ). கணக்குகளைச் சமர்ப்பித்தல்

(i) மாவட்டச் செயலகம் 2011 மார்ச் 31 அளவில் பின்வரும் கணக்குகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

| தலைப்பு இலக்கம் | கணக்குகளின் பெயர் |
|---|---|
| 267 | ஒதுக்கீட்டுக் கணக்கு |
| 26701 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு |

(ii) மாவட்டச் செயலகம் பின்வரும் பதிவேடுகளைப் பேணியிருக்காத அதே நேரம் சில பதிவேடுகளை முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிவராதிருந்தமையும் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளில் அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | தொடர்புடைய விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு அமைவாக இப் பதிவேடுகளைப் பேணிவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | கணனிகள், துணைச் சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | |
| (இ) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | |
| (ஈ) | இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | |

(iii) பெறுபவர் கையொப்பம், விலைக்கோரல் விபரங்கள், அங்கீகாரம், திருப்திகரமான அறிக்கை, கேள்வி நடைமுறை போன்ற சான்றுகள் இன்மை காரணமாக மாவட்டச் செயலகத்தின் ரூபா 283,910 ஆன ஐந்து கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(ஆ) பாதீட்டு வேறுபாடு**

(i) தலைப்பு 267 இன் 1-1-0-1404 செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 50,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிப்பாகவிருந்தது.

**(இ) பொதுவைப்புக் கணக்கு**

(i) 02 ஆண்டுகளுக்கும் மேலாக கோரப்படாது நிலுவையாக காணப்பட்ட மொத்தம் ரூபா 174,161 வைப்புக்கள் மீது நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) வைப்புக் கணக்கு மீதிகள் தொடர்பில் காலப்பகுப்பாய்வொன்று கிடைக்கப்பெறவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிணக்கக் கூற்று**

அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு கணக்கிணக்கக் கூற்றின் படி, 2010 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாயிருந்த மீதிகளின் மொத்தம் ரூபா 558,480 ஆக இருந்ததுடன் நிலுவையாகவுள்ள மீதிகளை அறவிடுதல் மீதான நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருந்தன.

**4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபையினை நடாத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2010 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் மீது பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நி.பி. 756 மற்றும் பொது நிதித் திணைக்களத்தின் 436 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்டச் செயலகம் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் வருடாந்த பொருட்

கணிப்பீட்டுச் சபையினை மேற்கொள்ள வேண்டிய போதிலும் அரச நிதிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த திகதியிலிருந்து இரண்டு மாதங்கள் கடந்திருந்த பின்னரும் மாவட்டச் செயலகம் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் 2010 ஆம் ஆண்டு தொடர்பில் பொருட் கணிப்பீட்டுச் சபையினை மேற்கொண்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தில் ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியில் நிலவிய தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 108,767 ஆகும்.

பின்வரும் அவதானிப்பும் மேற்கொள்ளப்பட்டது.

- நடப்பாண்டில் தீர்க்கப்படாது தொடர்ந்து வந்த ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்த ரூபா 108,767 ஆன பொறுப்புக்கள் 2010 இன் ஒதுக்கீட்டுக் கணக்கிற்கான பொறுப்புக்கள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.7 இணங்கி ஒழுகாமை

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்கி ஒழுகாமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இனங்கி ஒழுகாமை |
|---|---|---|
| | ரூபா | |
| (i) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 2.11.3 ஆம் பிரிவு | 804,164 | தொழிநுட்ப மதிப்பீட்டுச் சபை உறுப்பினர் ஒருவர் அறிக்கையில் கையொப்பமிட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணங்கள் | | |
| நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4) | 45,977,461 | யுத்த நிலைமை காரணமாக ஏற்பட்டிருந்த இழப்புக்கள் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | சேதங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 237(அ) | 6,845,312 | நிர்மாண வேலைகள் முடிவுறுத்தப்பட முன்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டிருந்தது. |

(iii) சுற்றறிக்கை ஏற்பாடுகள்

திறைசேரிச் சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| (அ) 2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | - | 2010 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கைகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (அ) 2006 மார்ச் 24 ஆந் திகதிய 28 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | - | 2010 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுகாமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்ட வரித் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாட்டிற்கு முரணாக கொள்வனவுகளிலிருந்து ரூபா 31,669 நிறுத்திவைத்தல் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.8 செயற்திட்டங்களை அமுலாக்கலிலுள்ள நலிவுகள்

செயற்திட்ட நிறைவேற்றலில் தாமதங்கள்

மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றலில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

### 4.9 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதில் உள்ள குறைபாடுகள்

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | தொடங்கப்பட்ட திகதி | முடிவுறுத்தப்பட வேண்டிய திகதி | திசெம்பர் 31 வரையான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| 1. முல்லைத்தீவு மாவட்டச் செயலக விடுதி எல்லைச் சுவரினை புதுப்பித்தல் | 1,600,000 | 2011 திசெம்பர் 05 | 2011 திசெம்பர் 28 | 1,416,245 | மோசமான காலநிலை மற்றும் மூலப்பொருள் இன்மை காரணமாக வேலைகள் தாமதமடைந்திருந்தன. |
| 2. மாந்தை கிழக்கு உதவி அரசாங்க முகவர் அலுவலகத்தின் மாநாட்டு மண்டபத்தினை மேம்படுத்தல் | 710,000 | 2011 திசெம்பர் 05 | 2011 திசெம்பர் 28 | 586,833 | |
| 3. ஒட்டிசுட்டான் உதவி அரசாங்க முகவர் அலுவலகத்தில் விடுதிகளை நிர்மாணித்தல் | 4,514,000 | 2011 ஒக்தோபர் 09 | 2011 திசெம்பர் 28 | 452,598 | |
| 4. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மூன்று படுக்கை அறை விடுதியினை நிர்மாணித்தல் | 4,280,000 | 2011 செப்தம்பர் 22 | 2011 திசெம்பர் 30 | 3,968,460 | |
| 5. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மூன்று படுக்கை அறை விடுதியினை நிர்மாணித்தல் | 6,803,000 | 2011 செப்தம்பர் 27 | 2011 திசெம்பர் 30 | 6,713,631 | |

**சீராக்கத்திற்கான மீதிகள்**

2010 ஆம் ஆண்டிற்காக மாவட்டச்செயலகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட சீராக்கங்களின் பகுப்பாய்விற்கமைய 06 மாதத்திற்கு மேலாக மற்றும் 01 வருடத்திற்கு குறைவாக வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாதிருந்த காசோலைகளின் தொகை ரூபா 2,093,544 ஆகும்.

## 4.10 இழப்புக்கள் மற்றும் சேதங்கள்

மாவட்டச் செயலகத்தில் பேணிவரப்பட்ட தகவல்களிலிருந்தும் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையிலும் ரூபா 45,977,461 ஆன இழப்புக்கள் மற்றும் சேதங்கள் வெளிப்பட்டது.

## 4.11 மனிதவள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையும் வெற்றடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை நிலைவரம் வருமாறு

| ஊழியர் வகை | அங்கீரித்த ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட மட்டம் | 27 | 10 | 17 |
| (ii) இரண்டாம் மட்டம் | 275 | 155 | 120 |
| (iii) ஆரம்ப மட்டம் | 32 | 20 | 12 |
| மொத்தம் | 334 | 185 | 149 |

## 4.12 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) உள்ளகக் கணக்காய்வு

மாவட்டச் செயலகம் மற்றும் உதவி அரசாங்க முகவர் அலுவலகங்களினால் உள்ளகக் கணக்காய்வு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்ப்படுத்தல்

மாவட்டச் செயலகம் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களினால் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.